# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஐப்பசி 20 திங்கட்கிழமை(06.11.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 341


# ஏ-9 பாதையை அரசாங்கம் திறந்தால் மட்டுமே விடுதலைப் புலிகள் அடுத்த கட்டப் பேச்சுக்கு!

## அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தகவல்



கொழும்பு, நவம்பம்,6

ஏ-9 வீதி மூட்டப்பட்டுள்ளதால், யாழ்ப்பாணத்தில் 6 லட்சம் மக்கள் திறந்த வெளிச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தப் பாதையைத் திறந்தால் மட்டுமே அடுத்த கட்ட சமாதானப் பேச்சுக்களில் நாம் கலந்துகொள்வோம்.

- இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

கொழும்பிலிருந்து வெளிவரும் 'சண்டே லீடர்' பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் அவர் தமது தரப்பின் மேற்சொன்ன நிலைப்பாட்டை வலியுறுத்திக் கூறியுள்ளார்.

கடந்த காலங்களின் அனுபவங்களிலும் இருநாள்கள் நடைபெற்ற அண்மைய ஜெனிவாப் பேச்சுகளினுடாகவும் சிறிலங்கா அரசாங்கமானது எதுவித தெளிவான, உறுதியான திட்டமிடல்களுடன் பேச்சுக்கு வரவில்லை. ஜெனீவா -2 பேச்சுகளில் நாம் எதனையும் புதிதாக முன்வைக்கவில்லை. முன்னைய ரணில் அரசாங்கத்துடன் செய்துகொள்ளப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பிரதான சரத்தான ஏ-9 பாதையைத் திறக்க வேண்டும் என்று கோரினோம். ஏனெனில் யாழ்.குடாநாட்டில் சிறைவைக்கப்பட்டுள்ள நிலையிலுள்ள மக்களுக்கான அத்தியாவசியப் பொருள்கள் சென்றடைய வேண்டும் என்பதற்காக.

### அரசின் இறுக்கமான நிலை


ஆனால் சிறிலங்கா அரசாங்கமோ எதுவித விளக்கமும் தராமல் அல்லது ஏ-9 பாதை மூடப்பட்டமைக்கான நியாயமான காரணங்களைக் கூறாமல் ஓர் இறுக்கமான நிலையையே கடைப்பிடித்தது. பாதுகாப்புக் காரணங்களுக்காக ஏ-9 பாதை திறக்கப்படவில்லை என்று சிறிலங்கா

(06ஆம் பக்கம் பார்க்க)

# சதாமுக்கு மரணதண்டனை!



நீதிமன்றில் சதாம்...



## பாக்தாத் சிறப்பு நீதிமன்றம் நேற்று தீர்ப்பு
## ஈராக்கில் வன்முறை வெடிக்கும் ஆபத்து

பக்தாத்,நவம்பர்6

ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன், அவரது உறவினர் பார்சன் அல் - டிக்ரிடி மற்றும் முன்னாள் பிரதம நீதிபதி ஆகியோருக்கு பக்தாத் சிறப்பு நீதிமன்றில் ஐந்துபேர் கொண்ட நீதிபதிகள் ஆயம் மரணதண்டனை விதித்து நேற்று தீர்ப்பளித்திருக்கிறது.

ஈராக்கின் துஜைல் நகரில் 148 ஷியா முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான வழக்கிலேயே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த வழக்கில் ஈராக்கின் முன்னாள் துணை ஜனாதிபதி தஹா யாசின் ரமதானுக்கு ஆயுள் தண்டனையும் ஏனைய மூவருக்கு 15 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது.

தீர்ப்பு வழங்கப்பட்டபோது ஆவேசமாகக் காணப்பட்ட சதாம், தீர்ப்பளித்த பின்னர் 'அல்லாஹூ அக்பர்' (அல்லாஹ் பெரியவன்) என உரத்துக் கோஷமிட்டார். ''ஈராக் நாடு நீடூழி வாழ்க. அங்குள்ள மக்கள் நீடூழி வாழ்க'' என்றும் அவர் கூச்சலிட்டார்.

''மரணதண்டனைக்கு நான் பயப்படவில்லை. தூக்கில் போடுவதை விட என்னைத் துப்பாக்கியால் சுட்டுக்கொல்வதையே விரும்புகிறேன்'' என்றும் ஆவேசமாகக் கூறினார் சதாம்.

(06ஆம் பக்கம் பார்க்க)

சதாம் ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது...



## பாதுகாப்பு உயர் அதிகாரிகள் சனியன்று கிழக்கே விஜயம்

கொழும்பு,நவ.6

அரச பாதுகாப்புப் பிரிவின் உயர் மட்ட அதிகாரிகள் குழுவொன்று நேற்றுமுன்தினம் கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் விஜயம் மேற்கொண்டது. பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, முப்படைகளின் தளபதி எயார் மார்ஷல் டொனால்ட் பெரேரா மற்றும் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா உட்பட பாதுகாப்பு உயர் அதிகாரிகள் இந்த விஜயத்தில் கலந்து கொண்டனர்.

கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பு நிலைவரம் குறித்து அந்தப் பிராந்தியத்துக்குப்

(06ஆம் பக்கம் பார்க்க)

## 15 சம்பவங்கள் பற்றி விசாரிக்க 8 பேர் அடங்கிய விசேட குழு!

### ஜனாதிபதி மஹிந்த நியமிப்பார்

கொழும்பு,நவ.6

2005ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்திற்குப் பின்னர் நாட்டில் இடம்பெற்ற நீதிக்குப் புறம்பான கொலைகள், ஆட்கடத்தல்கள் மற்றும் காணாமற் போதல்கள் போன்ற 15 சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக 8 பேர் அடங் கிய விசாரணைக் குழுவொன்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று நியமிக்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் கதிர்காமரின் கொலை, மன்னாரில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் தூக்கிலிடப்பட்டமை, பேசாலையில் தேவாலயத்தின் உள்ளே பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டமை, யாழ். தீவகம் - அல்லைப்பிட்டியில் பொது மக்கள் கொல்லப்பட்டமை, திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் கொல்லப்பட்டமை, கெப்பிற்றிக்கொல்லாவையில் பொது மக்கள் மீது நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதல், மூதூரில் தொண்டு நிறுவன ஊழியர்கள் 17 பேர் கொல்லப்பட்டமை. அவிசாவளையில் தலையில்லா ஐந்து மனித உடல்கள் கண்டெடுக்கப்பட்டமை, மூதூரில் முஸ்லிம்கள் காணாமற்

(06ஆம் பக்கம் பார்க்க)

## 'யுனிசெவ்' பிரதிநிதி வியாழனன்று கிளிநொச்சிக்கு

கொழும்பு,நவ.6

'யுனிசெவ்' அமைப்பின் உயர் பிரதிநிதி ஒருவர் எதிர்வரும் 9 ஆம் திகதி கிளிநொச்சிக்குச் செல்கின்றார்.

சிறுவர்களின் நலன்கள் மற்றும் ஆயுத மோதல்களில் சிறுவர் சிக்கிக் கொள்ளல் போன்றன விடயங்கள் தொடர்பான ஐ.நா.வின் விசேட பிரதிநிதியின் இலங்கைக்கான ஆலோசகர் அலன் நொக் என்பவரே கிளிநொச்சிக்குச் செல்லவுள்ளார்.

நேற்று கொழும்புக்கு வந்து சேர்ந்த அவர், எதிர்வரும் 14 ஆம் திகதி வரை பல்வேறு தரப்பினரையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

9ஆம் திகதி கிளிநொச்சிக்குச் செல்லவுள்ள அவர் அங்கு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை சந்தித்துப் பேசுவார்.

(06ஆம் பக்கம் பார்க்க)

## ஏ-9 பாதை மூடப்பட்டமை போர்நிறுத்த ஒப்பந்த மீறல்

### கண்காணிப்புக் குழு தெரிவிப்பு

கொழும்பு,நவ.6

'ஏ-9' பாதை மூடப்பட்டுள்ளமையானது யுத்த நிறுத்த ஒப்பந்த மீறல் என்று இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

''ஸ்ரீலங்கா அரசு, 5 லட்சம் மக்களை யாழ்.குடாநாட்டுக்குள் முற்று கையிட்டு வைத்திருக்கிறது. ஏ-9 பாதை உடனடியாகத் திறக்கப்பட வேண்டியது அவசியமாகும் இந்தப்பாதை விவகாரம் யுத்தநிறுத்த ஒப்பந்தத்துக்கு உட்பட்டது. எனவே இதனை மூடிவைத்திருப்பது ஒப்பந்தத்தை மீறும் செயல்'' என்று இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஹெலன் ஒல்ப்ஸ் டொடிட்டர் தெரிவித்துள்ளார்.

''ஏ-9 பாதை திறப்பது குறித்த விவாதங்களை ஜெனிவாப் பேச்சுகளில் அரசு மேற்கொள்ளும் என்று நாம் எதிர்பார்த்தோம். ஏ-9 பாதையை மூடியிருப்பதன் மூலமாக அரசின் நோக்கம் என்ன என்பது எமக்குத் தெரியவில்லை'' என்றும் அவர் கூறினார்.

## புலிகள் அமைப்பில் இணைய வந்த 20 சிறார்கள் பெற்றோரிடம் ஒப்படைப்பு

விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்துகொண்ட 20 சிறுவர்கள் நேற்று அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றனர்.

இது தொடர்பாக புலிகளின் இராணுவப் பேச்சாளர் இ.இளந்திரையன் தெரிவித்ததாவது:-

தற்போது நாங்கள் புதிய சட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளோம். அதன்படி குழந்தைகளுக்கு நூறு வீதம் பாதுகாப்பு அளிக்கப்படுகின்றது. 18 வயதுக்குக் குறைந்தவர்கள் படைகளில் இணைந்து செயற்படமுடியாது. அத்துடன் வயது குறைந்த சிறார்களை வேலைக்கமர்த்துவதுகூட தண்டனைக்குரிய குற்றமாகும்.

வயது குறைந்த சிறுவர்களை நாங்கள் அவ்வப்போது விடுவித்துக்கொண்டு தான் இருக்கின்றோம். தற்போது 20 சிறுவர்கள் விடுவிக்கப்படுகின்றார்கள் - என்றார் இளந்திரையன். (சு-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அன்னரத்தினம் முருகேசபிள்ளை



சண்டிலிப்பாய் வடக்கைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியை (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி) திருமதி அன்னரத்தினம் முருகேசபிள்ளை அவர்கள் 04.11.2006 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் துன்னாலை தெற்கைச் சேர்ந்த முருகேசபிள்ளை(குலம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்வர்களான பத்மநாதன், அருணாசலம், சரவணமுத்து மற்றும் செல்வரட்ணம், இரங்கநாதன், யோகேஸ்வரி, சோமசுந்தரம், சறோஜினிதேவி, கனகசுந்தரம், கமலாதேவி, இராசதுரை, ஜெயதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெயகுமாரன், விஜயகுமாரன், சுகுமாரன், ஜயந்தி, நந்தகுமாரன், வசந்தி, சிவகுமாரன், மங்களகுமாரன், உதயகுமாரன், ஆகியோரின் பாசமிகு தாயும் இந்திரா, இராசமணி, கமலாதேவி, கலாதேவி, தனபாலசிங்கம், சாந்தகுமாரி, கமலா, பாமினி ஆகியோரின் அன்பு மாமியும் அரன், தரன், கரன், டசினி, டயானி, தர்மினி, டிலுக்சி, டாரகா, அஞ்சலி, ஸ்டீபன், விக்னன், லவன், நிலானி, ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின்பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக இன்று 06.11.2006 முதல் ஜெயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு நாளை(07.11.2006) செவ்வாய்க் கிழமை 4 மணிக்கு பொரளைஇந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சுகுமாரன்,
நந்தகுமாரன்,
இலங்கை வங்கி.

51/50, சுவர்ணா வீதி,
கிருலப்பனை, கொழும்பு- 6.
தொ.பே.: 2505839

(சி-51277)

## மகாலட்சுமி நாகரெத்தினம் (தங்கனக்கா)



சிவபுர வீதி, வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகாலட்சுமி நாகரத்தினம் 04.11.2006 சனிக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகரெத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ் சென்ற இராமச்சந்திரன் (TL), நாகேந்திரன் (விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் கலாசாலை) ஆகியோரின் அருமைத் தாயும் புவனேஸ்வரி, சந்திரிகா (விரிவுரையாளர், யாழ். தேசிய கல்வியற் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியும் ரத்தினகுமார், ரஜனி, நளினி, ராஜ்குமார், விமலினி, துவாரகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (05.11.2006) ஞாயிற்றுக்கிழமை பி.ப 1. 30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கோண்டாவில் கிழக்கு ஆலடி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நா.நாகேந்திரன் (மகன்).

வன்னியசிங்கம் வீதி,
கோண்டாவில். (54984)

## திருமதி கயிலாசபிள்ளை பறுவதம்



கலாசாலை வீதி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் வடக்கு, கமலாம்பிகா பவனத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கயிலாசபிள்ளை பறுவதம் 05.11.2006 ஞாயிற்றுக்கிழமை காலையில் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வ.வ.கயிலாசபிள்ளை (கொக்குவில், கோண்டாவில் முன்னாள் கிராம சபை உறுப்பினர்) அவர்களின் அன்பு மனைவியும் தர்மகுலசிங்கம் (பிரதம நூலகம் - யாழ். பல்கலைக்கழகம்), சந்திரகுலசிங்கம் (மருத்துவ பீட நூலகம் - யாழ். பல்கலைக்கழகம்), கமலாம்பிகை, நிமலாம்பிகை (வவுனியா), மீனாம்பிகை (யாழ். போதனா வைத்தியசாலை), தேவர்குலசிங்கம் (கனடா), குமாரகுலசிங்கம் (கனடா), குபேரகுலசிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் சந்திரமலர், புஸ்பலீலா, தம்பித்துரை, தங்கராசா (சாலைப்பரிசோதகர் - இ.போ.ச., வவுனியா), ரவீந்திரன் (விவசாய ஆராய்ச்சி நிலையம் - திருநெல்வேலி), ஜெயவதனி (கனடா), கவிதா (ஆசிரியை - யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிர மணியம் வித்தியாசாலை) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்.

'கமலாம்பிகை பவனம்'
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில். (54978)

தரம் 5 புலமைப் பரிசில்
வகுப்புகள்
ஆரம்பம் 2007

11.11.2006 சனி
மு.ப. 11 மணி

ஆசிரியர்
இ.தேவகுமார்.

சூராவத்தை அம்மன்
கோயிலடி, சுன்னாகம்.

மணமகன் தேவை

1985இல் பிறந்த அனுசம் நட்சத்திரம் பகை பெற்ற 8 இல் செவ்வாய் கிரகபாவ சங்கியை 72 கொண்ட உயர்கல்விகற்ற பெண்மணிக்கு ஏற்ற மணமகனைத் தேடுகின்றோம்.

தொடர்பு: ஆனந்தி திருமணசேவை,
56, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தேவை

"சந்தா முகவர்கள்"
வயதெல்லை 18-35
சம்பளம் 7500/=
கல்வித் தகைமை க.பொ.த (சா/த)
ஆர்வமுடையோர் சான்றிதழ்களுடன் நேரில் வந்து விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
"பரஞ்சோதியம்"
மருத்துவ மாத இதழ்
443, ஸ்ரான்லி வீதி, அத்தியடி யாழ்ப்பாணம்.

# காணவில்லை

## சுப்பிரமணியம் வசந்தகுமாரி



சாளம்பை, புலோலி மேற்கு, பருத்தித்துறையைச் சேர்ந்த சுப்பிரமணியம் வசந்தகுமாரி கடந்த செவ்வாயக் கிழமை முதல் காணாமல் போயுள்ளார். இவர் சித்தசுயாதீனமற்றவர். இவரைக் கண்டவர்கள் கே. இலங்கேஸ்வரன், கதிரவேற்பிள்ளை வீதி, புலோலி, பருத்தித்துறையுடனோ தொ.பே.: 226 3655 உடனோ தொடர்பு கொள்க.

கு.இலங்கேஸ்வரன்.

(சி-51278)

# அந்தியேட்டி அழைப்பும் சாந்திப் பிரார்த்தனையும்

மலர்வு
08
-
08
-
1945



உதிர்வு
08
-
10
-
2006

## திருமதி ரஞ்சனாதேவி M.S. ஸ்ரீறாகுலன் (ரஞ்சனா)

கடந்த (08.10.2006)ஞாயிற்றுக்கிழமை (திருச்சி) இந்தியாவில் காலமான எமது குடும்பத் தலைவி ரஞ்சனாதேவி (ரஞ்சனா) M.S. ஸ்ரீ றாகுலன் அவர்களின் ஆத்மசாந்திப்பிரார்த்தனை நாளை(07.11.2006)செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது கேணியடி, திருநெல்வேலி இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
M.S. ஸ்ரீறாகுலன்(கணவர்),
ஸ்ரீ.சுயந்தினி(சுஜி - மகள் - லண்டன்),
ஸ்ரீ.நிஷாந்தன்(தம்பன் - மகன் - மெற்றாஸ்),
T.சிவகுமார்(சிவா - மருமகன் - லண்டன்),
ஸ்ரீ.அட்ஷாஜினி (பேர்த்தி - லண்டன்),
திரு.திருமதி தர்மராஜா (சம்பந்தி, ஆனைக்கோட்டை)

இல.154, கேணியடி,
திருநெல்வேலி

(54973)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
25
*
07
*
1937



மறைவு
07
*
10
*
2006

## திருமதி மனோன்மணி சின்னராசா

அன்பின் ஒளிவிளக்காய் பாசத்தின் உறைவிடமாய்
பண்பில் குணவதியாய் அரவணைப்பில் தாயாக
ஆண்டாண்டு காலமாக எம்முடன் வாழ்ந்தவரே
உங்கள் அன்பிற்காக ஏங்கித் தவிக்கின்றோம்
காலங்கள் ஓடினாலும் கரையாது உங்கள் நினைவு.

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

(54974) குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## கார்த்திகேசு நடராசா

உசன், மிருவிலை வசிப்பிடமாகக் கொண்ட கார்த்திகேசு நடராசா நேற்று (05.11.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் வரதலட்சுமி, வசந்தராசா, விமலராசா, விஜயராசா ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.11.2006) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் ஈச்சங்காடு மயானத்தில் தகனம் செய்யப் படும்.

இந்த அறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்,
மனைவி,
பிள்ளைகள்.

உசன்,
மிருசுவில்.

# சிறுவர் கண்காட்சியில் பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டனர்

யாழ்ப்பாணம், நவ.6

சிறுவர் மகிழ்வகம் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் ஆதரவுடன் விழி உள சமூக அமையத்தின் ஏற்பாட்டில் 'பிள்ளைகளுடன் வாருங்கள் பிரச்சினைகளைத் தீருங்கள்' என்னும் தொனிப் பொருளில் 3 நாள் சிறுவர் கண்காட்சி கடந்த சனிக் கிழமை முதல் சிறுவர் மகிழ்வகத்தில் நடைபெற்று வருகின்றது.

யாழ். மேலதிக அரசஅதிபர்ஆ.சிவசுவாமி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்துவைத்தார்.

யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்தும் பெருமளவான சிறார்கள் இக் கண்காட்சியில் கலந்து கொண்டனர்.

பிள்ளைகளின் ஆரோக்கியம், ஆக்கத் திறன் போன்ற விடயங்களில் ஆலோசனை வழங்கல், மகிழ்வூட்டல் நிகழ்வுகள் போன்றவை நடத்தப்பட்டதுடன் குறுந்திரைப் படங்களும் காண்பிக்கப்பட்டன.

நிகழ்வில் சர்வதேச, உள்ளூர் அரசசார்பற்ற நிறு வனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (1-202)

# லயன்ஸ் கழகத்தினர் மருந்துப் பொருள்கள் அன்பளிப்பு

தென்மராட்சி, நவ.6

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் ஒரு தொகுதி நீரிழிவு நோய் மருந்துப் பொருள்களை சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் அண்மையில் கையளித்தனர்.

சர்வதேச லயன்ஸ் கழகத்தினர் கடந்த ஒக்ரோபர் மாதத்தினை நீரிழிவு நோய்த் தடுப்பு மாதமாக பிரகடனப்படுத்தியதையடுத்து தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள 26 ஆரம்ப சுகாதார நிலையங்களில் நோயாளர்களுக்கு வழங்கவென மருந்துப்பொருள்களை வழங்கியதாக தெரிவிக்கப்பட்டது.

தேவை

(1) மில்வேலையில் அனுபவம் உள்ளவர்.
(1) உதவியாளர்
தொடர்பு: பிருந்தா மில்ஸ்,
இல.18, றக்கா றோட், யாழ்ப்பாணம்.
தொ.பே.: 9201

தேவை

ரைப் செற்றிங் (தமிழ்) செய்யக்கூடியவர்கள் உடன் தேவை. புத்தகம் அடிக்கக் கூடியவர்களாக இருக்கவேண்டும். இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்பு: P.M.C
54/8, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். (வேம்படிச் சந்திக்கும் ஆரியகுளத்துக்கும் இடையில்)

# மரண அறிவித்தல்கள்

## மாணிக்கதியாகராசா செல்வராசா (சித்தியார்)

மயிலணி, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் உடுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் முன்னாள் மேல் நீதிமன்ற முதலியாரும் முன்னாள் வலி. தெற்கு பிரதேச சபை தலைவருமான மாணிக்கதியாகராசா செல்வராசா (சித்தியார்) நேற்று (05.11.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கதியாகராசா - புவனநாயகம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - நாகம்மாள் தம்பதியரின் மருமகனும் பரமேஸ்வரியின் கணவரும் யுவீந்திராவின் (கனடா) தந்தையும் ரமணியின் மாமனும் ஹரிப்பிரணவனின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.11.2006) திங்கட்கிழமை மதியம் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்,
பரமேஸ்வரி
(புஸ்பம், மனைவி)
தொ.பே.: 0212227704

'துவாரகை'
6 ,அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

## அன்னலிங்கம் மனோன்மணி



காரைநகரைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வதிவிடமாகவும் கொண்ட அன்னலிங்கம் மனோன்மணி நேற்று (05.11.2006) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை தம்பதியரின் ஏக புத்திரியும் ஐயாத்துரையின் (காந்தி) அன்புச் சகோதரியும் ஐயாத்துரை செல்லமுத்துவின் (பவளம்)மைத்துனியும் அமரர் சந்திரவேல்அன்னலிங்கத்தின் பாசமிகு மனைவியும் ஈஸ்வரியின் (சின்னராசு)அன்புத் தாயும் நாகலிங்கம், இலட்சுமணனின் பாசமிகு மாமியும் விக்கினேஸ்வரன்-சத்தியபாமா, ஆனந்தமோகன்- பிறேமாவதி, ஜெகதீஸ்வரன் (உருத்திரன்), சஜிந்தன் - சகுந்தலாவின் பாசமிகு பேர்த்தியும் வியாசகன், விதுர்னன், வைஸ்ணவன், செந்தாழன், சாம்பவி, சாரங்கா ஆகியோரின் அன்பு மிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.11.2006) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் 2 மணியளவில் மல்லாகம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சஜிந்தன்- சகுந்தலா
குடும்பத்தினர்.

7 ஆம் கட்டை,
கோயில் வீதி,
மல்லாகம். (54981)

## திருமதி கேதீஸ்வரன் புஸ்பராணி



ஆறுகால்மடத்தைப் பிறப்பிடமாகவும்பொம்மை வெளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கேதீஸ் வரன் புஸ்பராணி (பவி) நேற்று (05.11.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கேதீஸ்வரனின் அன்பு மனைவியும் தினேஸ்குமார், நிரோஸ்குமார், கஸ்தூரி ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.11.2006) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கணவன்,
பிள்ளைகள்,
தம்பி, கோபால்

அராலி வீதி,
பொம்மை வெளி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வாய்க்கால்கள்,பாலங்கள் புனரமைக்கப்படாததால்

# காக்கைதீவு தொடக்கம் அராலி வரை வயல் நிலங்களில் வெள்ளம் தேக்கம்

## நெற்பயிர்கள் அழியும் நிலை

யாழ்ப்பாணம், நவ.6

காக்கைதீவில் இருந்து அராலிப் பாலம் வரையான வீதியில் உள்ள பாலங்கள், வாய்க்கால்கள் எதுவும் புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் உள்ளன.

இதனால் அப்பகுதிகளில் வெள்ளம் ஓட முடியாது தேங்கி நிற்பதனால் அப்பகுதியில் செய்கை பண்ணப்பட்ட நெற்பயிர்கள் அழியும் அபாயநிலை தோன்றியுள்ளது.

காக்கைதீவில் இருந்து அராலிப் பாலம் வரையான வீதியில் உள்ள பாலங்கள், வாய்க்கால்கள் எதுவும் நீண்ட காலமாகப் புனரமைக்கப்படவில்லை. வாய்க்கால்களில் குப்பை கூழங்கள் தேங்கியுள்ளன. இதனால் மழை வெள்ளம் ஓடமுடியாது அப்பகுதிகளில் உள்ள வயல் நிலங்களில் தேங்கி நிற்கின்றன.

இதன் காரணமாக நெற்பயிர்கள் அழுகி அழிவடையும் நிலைமை தோன்றியுள்ளது.

குடாநாட்டில் அரிசிக்கு ஏற்பட்டுள்ள பெரும் தட்டுப்பாட்டையடுத்து விவசாயிகள் பெருமளவான நிலங்களில் நெல் விதைப்பை மேற்கொண்டுள்ளனர்.

இந்நிலையில் செய்கை பண்ணப்பட்டுள்ள வயல் நிலங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் பயிர்கள் அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

உரியவர்கள் இவ்விடயத்தில் கவனமெடுத்து இதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க முன்வர வேண்டும் என்று விவசாயிகள் கேட்டுள்ளனர்.



யாழ். சமூக செயற்பாட்டு மையம் பருத்தித்துறையில் உள்ள சிறுவர் கழகங்களை இணைத்து சிறுவர் சங்கம நிகழ்வொன்றை தும்பளை லூர்த்து மாதா ஆலயத்தில் நடத்தியது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட சிறுவர்கள் ஆடிப்பாடி மகிழ்வதைப் படத்தில் காணலாம். (115)

### பயிற்சி நெறி

கைதடி, நவ.6

மாவட்ட கிராம அபிவிருத்தித் திணைக்கள நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் மற்றும் மகளிர் அபிவிருத்தி நிலைய போதனாசிரியர்கள் ஆகியோருக்கான பயிற்சிநெறி நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 9ஆம் திகதி வரை யாழ்.செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற உள்ளது. (202-75)

### இராமநாதன் ம.வி. தற்காலிக இடத்தில் இயங்குகின்றது

தென்மராட்சி,நவ.6

உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் தற்போது மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்திற்கு அருகில் தற்காலிகமாக இயங்கி வருகின்றது.

இடம்பெயர்ந்துள்ள இவ் வித்தியாலயத்தின் மாணவர்கள் பாடசாலையில் இணைந்து கொள்ளலாமென வித்தியாலய அதிபர் அறிவித்துள்ளார். (202)

## ஆங்கிலம் கற்பிக்க விரும்பும் பட்டதாரிகளுக்கு குறுகியகால பயிற்சி வழங்க ஏற்பாடு

வடமராட்சி கிழக்கு,நவ.5

புதிதாக நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கு தேசிய கல்வி நிறுவகத்தினால் குறுகியகால ஆங்கில பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

பாடசாலைகளில் ஆங்கில பாடத் தைக் கற்பிக்க விரும்புகின்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கே இப்பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

மேற்படி பயிற்சியினை பெறவிரும்புகின்ற பட்டதாரி ஆசிரியர்கள் ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் திறமைச் சித்தியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

இப்பயிற்சியினை பெற விரும்புகின்றவர்கள் தாம் கடமைபுரியும் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் விண்ணப்பத்தினை சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (182)

## தென்மராட்சியில் சுயதொழில் வாய்ப்புக்கு 200 பேரைத் தெரிவுசெய்ய நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி,நவ.6

தென்மராட்சிப் பிரதேசத்தில் குடும்ப உழைப்பாளரை இழந்த குடும்பங்களுக்கு சுயதொழில் முயற்சியை மேற்கொள்ள நிதி உதவி வழங்கப்படவுள்ளது. அத்துடன், பல அபிவிருத்தித் திட்டங்களும் முன்னெடுக்கப் படவுள்ளன.

இதற்கான நிதியை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் மக்கள் மேம்பாட்டுக்கான திட்டமிடல் பிரிவு ஒதுக்கியுள்ளது.

விதவைகள், ஆதரவற்றோர், வலுவிழந்தோர் தரத்தில் இருந்து 200 பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர். இவர்களின் சுய தொழில் முயற்சிக்காகத் தலா 10 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

அபிவிருத்தித் திட்டங்களில் நாவற்குழி புனித பத்திமாதா தேவாலயத்திற்கு ஒலி பெருக்கி கொள்வனவு செய்வதற்கு ஒரு லட்சம் ரூபாவும் -

மீசாலை வடக்கு பாரதி சனசமூக நிலையத்திற்கு புத்தகங்கள் கொள்வனவு செய்யவும் சாவகச்சேரியில் உள்ள சனசமூக நிலையம், முன்பள்ளி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆகியவற்றுக்கு தளபாடம் கொள்வனவு செய்யவும் தலா 2 லட்சம் ரூபாவும் -

மந்துவில் நவசக்தி சனசமூக நிலையம் மற்றும் குடியேற்றத்திட்டம் ஆகியவற்றுக்கு மின் விநியோகம் மேற்கொள்ள மூன்று லட்சம் ரூபாவும் - ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கைதடி வளர்மதி சனசமூக நிலைய புனரமைப்பு வேலைக்கு 4 லட்சம் ரூபாவும் கொடிகாமம் கச்சாய் வீதி புனித பேதுருவானவர் தேவாலயம், மந்துவில் கந்தசாமி கோயில், நுணாவில் மத்தி கந்தசாமி கோயில், கைதடி மேற்கு சலவைத் தொழிலாளர் கட்டடம் ஆகியவற்றின் திருத்த வேலைக்கு தலா 2 லட்சம் ரூபாவும்-

நாவற்குழி வீடமைப்புத் திட்ட சான்றோர் சனசமூக நிலையப் புனரமைப்பு வேலைக்கு இரண்டு லட்சம் ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தென்மராட்சிப் பிரதேச செயலக வட்டாரம் தெரிவித்தது. (1-202)

### பழமரக்கன்றுகள் மக்களுக்கு விநியோகம்

வலி.மேற்கு,நவ.6

'கெயர்' நிறுவனம் மாதகல் விவசாயிகள் சம்மேளனத்திற்கு ஒருதொகை பழமரக்கன்றுகளை வழங்கியுள்ளது.

மா, பலா, எலுமிச்சை (தேசி), கொய்யா ஆகிய பழமரக்கன்றுகள் இவ்வாறு வழங்கப்பட்டுள்ளதாகவும் -

இவற்றை வீட்டு வளவுகளில் நடுவதற்கு மக்களுக்கு வழங்கப்பட்டு வருவதாகவும் - மாதகல் விவசாயிகள் சம்மேளனத்தின் தலைவர் வி.சிற்றம்பலம் தெரிவித்தார். (1-135)

### திறப்பு விழா

வலிதென்மேற்கு, நவ.6

சில்லாலை தெற்கில் 'நியாட்' திட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட பொது நோக்கு மண்டபத்தின் திறப்புவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இளவாலை தெற்கு கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் சிவஸ்ரீ.சோ.நடராஜக்குருக்கள் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கமும் சிறப்புவிருந்தினராக யாழ். அரசாங்க செயலக 'நியாப்' திட்ட பிரதி பணிப்பாளர் கா.பாலகிருஸ்ணனும் கலந்து கொள்வர். (202-135)

## வாசகர் திருமுகம்

### ஊரிலுள்ள சங்கக் கடையிலேயே நிவாரணம் வழங்க முடியாதா?

தற்போதைய நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக ப.நோ.கூ.சங்கங்கள் மூலம் நிவாரணமாகவும், பணத்திற்கும் அத்தியாவசிய உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், இலவசமாக வழங்கப்படும் உணவுப் பொருள்களை ஒவ்வொரு கட்டத்திலும் வெவ்வேறு கிளைகளில் பொருள்களைப் பெறுமாறு வறிய மக்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். நீர்வேலி மேற்கு ஜே/270 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த மக்கள் அந்தந்த கிராமத்திலேயே ப.நோ.கூ.சங்க கிளைகள் 100 மீற்றர் தூரத்திற்குள் இருக்கின்றன. அவ்வாறிருக்கும்போது 3 கி.மீற்றர் தூரத்திலுள்ள நீர்வேலி மா சிவன் சந்திக்கு அப்பால் உள்ள கிளை இல. 3இல் பொருள்களைப் பெறுமாறு பணிக்கப்பட்டுள்ளது. மக்கள் வெளியில் நடமாட அஞ்சும் காலமிது. இந்நிலையில், வேறு பிரதேச மக்கள் எவ்வாறு தங்கள் குடும்ப மற்றும் இதர வேலைகளை விட்டுவிட்டு பொருள்களை வாங்க போக முடியும்.

இவ்வாறு நிவாரணப் பொருள்கள் கட்டத்திற்கு கட்டம், கிளைக்கு கிளை தாவுவது ஏன்? இலவச நிவாரணம் என்பதாலா? அல்லது மக்களை அன்றாடம் அல்லாட வைக்க வேண்டும் என்பதற்காகவா?

அண்மையில் இப்பிரிவு மக்களுக்கு இப்பிரதேசத்திலிருந்து 3 கி.மீற்றருக்கு அப்பால் உள்ள வேறு கிளையாகிய 8ஆம் கிளையில் 2 லீற்றர் மண் எண்ணெய் வழங்கப்பட்டது. இது உதயன் பத்திரிகையில் வெளியான செய்தி மூலமே மக்களால் அறிய முடிந்தது. இல்லையேல் மண் எண்ணெய்யைப் பெற முடிந்திருக்காது. எனவே, மக்களின் அவல நிலையைக் கவனத்தில் [illegible] பொருள்களைப் பெற்றுக் கொள்ள நடவடிக்[illegible]ட்டுக்கொள்கின்றேன்.

நீர்வேலி. நா.இராசநாயகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வடமராட்சி ப.நோ.கூ. சங்கக் கிளையின் முன்பாக எச்சரிக்கைச் சுவரொட்டி

உடுப்பட்டி,நவ.6

'நிறை குறைவாக இருந்தாலும் விலையில் மாற்றம் இருந்தாலும் கடும் தண்டனை வழங்கப்படும்' என்னும் வாசகம் அடங்கிய சுவரொட்டி வடமராட்சி ப.நோ.கூ. சங்கக் கிளை ஒன்றின் முன்பாக ஒட்டப்பட்டுள்ளது.

சிவப்பு நிறத்தாளில் எழுதப்பட்ட இந்தச் சுவரொட்டி பருத்தித்துறை பிரதேச எல்லைக்குட்பட்ட கிளை ஒன்றிலேயே ஒட்டப்பட்டுள்ளது.

வாசகத்தின் முடிவில் எல்லாளன் படை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (202-155)

### நல்லெண்ணை விலை உயர்வு

வலி.தென்மேற்கு, நவ.6

நல்லெண்ணைய் விலையும் யாழ். மாவட்டத்தில் அதிகரித்துள்ளது.

தேங்காய் எண்ணெய் மற்றும் மரக்கறி எண்ணெய் ஆகியவற்றின் விலைகள் மிகவும் அதிகரித்து விட்டதாலும், அவற்றிற்கு தட்டுப்பாடு நிலவி வருவதாலும் பலர் நல்எண்ணையை சமையலுக்குப் பயன்படுத்தி வருகின்றனர்.

இதனால் முன்பு 200 ரூபாவாக விற்கப்பட்டுவந்த ஒருபோத்தல் நல்லெண்ணையை தற்போது 375 ரூபா முதல் 400 ரூபாவரை வலி.தென்மேற்குப் பகுதியில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. (1-135)

### கல்வி உபகரணங்கள் அன்பளிப்பு

வடமராட்சிகிழக்கு,நவ.6

யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தின் அனுசரணையுடன் பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபையினால் நாகர்கோவில் மகா வித்தியாலய மாணவர்களுக்கு பாதணி, புத்தகப்பை மற்றும் அப்பியாசப் புத்தகங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இவ் வைபவம் நாகர்கோவில் மகா வித்தியாலய அதிபர் எஸ்.மகேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபை குருவானவர் அருட்திரு என்.அருள்நாதன், யாழ். கிறிஸ்தவ ஒன்றிய நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் எஸ்.மரியரட்ணம் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்கான பொருள்களை வழங்கினர். (1-182)

### கடன் நிலுவைகளை மீளச் செலுத்த கோரிக்கை

தென்மாரட்சி கிழக்கு, நவ.6

சாவகச்சேரி கமநல சேவைப்பிரிவில் சீடாத்திட்டம் மற்றும் தூவல் நீர்பாசனத் திட்டம் ஆகியவை ஊடாகக் கடன்பெற்ற விவசாயிகள் தமது நிலுவைப் பணத்தை உடனடியாகச் செல்லுமாறு கமநல சேவை நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் கேட்டுள்ளார்.

இக்கடன் தொடர்பான சகல விடயங்களும் இவ்வருட இறுதிக்குள் முடிக்கப்பட வேண்டிய தேவை உள்ளதால் நிலுவைக்கடனைச் செலுத்துமாறும்-

விவசாய சம்மேளனங்கள் 2005 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு அறிக்கையைச் சமர்பிக்குமாறும்- குளங்கள் புனரமைத்தோர் அவை தொடர்பான கணக்கறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும்- அவர் மேலும் கேட்டுள்ளார். (202-122)

### பருத்தித்துறையில் கிராமசேவையாளருக்கு உள்ளக இடமாற்றம்

பருத்தித்துறை, நவ.6

பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கிராம சேவையாளர்கள் சிலர் உள்ளக இடமாற்றம் பெற்றுள்ளனர்.

பி.தயாநிதி பருத்தித்துறை ஜே/401 பிரிவிற்கும், கே.யோ[illegible] பருத்தித்துறை கிழக்கு ஜே/403 பிரி[illegible]லைந்திரன் அல்வாய் வடமத்தி ஜே/398 பிரிவிற்கும், எம்.கந்தசாமி பொலிகண்டி மேற்கு ஜே/393 பிரிவிற்கும் எஸ். தவனேஸ்வரன் வல்வெட்டித்துறை வடமேற்கு மற்றும் வடமத்தி பிரிவிற்கும் கடந்த முதலாம் திகதி முதல் பருத்தித்துறை பிரதேச செயலரினால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (1-118-202)

### மேலும் ஒரு பாடசாலையின் ஜி.சீ.ஈ. (உ/த) முடிவுகள்

யாழ்ப்பாணம்,நவ.6

கடந்தமாதம் வெளியிடப்பட்ட ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் மேலும் ஒரு பாடசாலையின் முடிவுகள் வருமாறு:-

சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி.

தே.சபேசன் - ஏ,2பி, [illegible].காஞ்சன் - ஏ,2பி, க.முகுந்தன் - ஏ,பி,சி, சு.இளவரசி - ஏ,பி,சி, சி.கமலேஸ்வரன் - ஏ,பி,சி, இ.சிவச்செல்வன் - ஏ,2சி, இ.சிவச்செல்வன் - 2பி,சி.(202)

## விவசாயிகளுக்கு மானிய விலையில் உரம்

விவசாயிகள் மானிய விலையில் உரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு சாவகச்சேரி கமநல சேவை நிலையத்தினர் விண்ணப்பப்படிவங்களை விநியோகித்து வருகின்றனர். விவசாய சம்மேளனங்களால் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட விவசாயிகளின் பெயர்ப்பட்டியல் பிரகாரம் பிரதேச விவசாயிகள் சங்கங்களிடம் விண்ணப்பங்கள் வழங்கப்படுகின்றன என்றும்- விண்ணப்பங்கள் பூரணப்படுத்தி ஒப்படைக்கப்பட்டதும் உர விநியோகம் ஆரம்பிக்கப்படும் என்றும்- கமநல சேவைத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். (202-122)


## றெறாசோ மாபிள் பதித்தல்

மேலைத்தேய நவீன தொழில்நுட்பங்களுடன் வடகீழ் மாகாண ஆரம்பகால தொழில் விற்பன்னர்

**தேவையான மூலப் பொருள்களுடன் வேலை செய்து கொடுக்கப்படும்.**

(தேவை ஏற்படின் மின்சார வசதி செய்யப்படும்)

'மாபிள்ஸ்'

கண்டாமை, தொல்புரம். தொ.பே 222 5286, 222 6729 (54899)


## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில் 21 ✱ 07 ✱ 1960

அநியாய அழிப்பில் 21 ✱ 09 ✱ 2006

### அமரர் ஐயாத்தம்பி குமாரகுலசிங்கம் (குமார்)

*குலவிளக்காய் ஒளிவீசி குதூகலிக்கச் செய்தீரே!*
*நலமாக இனம் வாழ நல்லன பல செய்தீரே!*
*பலமான உன் உடலை பதம்பார்த்து நின்றாரோ!*
*தினம்தினம் கலங்குகின்றோம் நின்மதியில்லாமல்.*

நிரந்தரமுகவரி:
விடுவளை, எழுதுமட்டுவாள்
தற்காலிக முகவரி:
பத்தாவத்தை, இளவாலை.

*பிரிவால் துயருறும்:*
பெற்றோர், மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்.

## உள்ளத்தை உருக்கும் பதினாறாம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில் 15 ✱ 04 ✱ 1904

ஆண்டவன் அடியில் 30 ✱ 10 ✱ 1990

### அமரர் வேலாயுதர் சிதம்பரப்பிள்ளை

*திதி: அபரபக்க பிரதமை 06.11.2006*

*''அப்பாவே எங்கள் அன்பின் உறைவிடமே*
*ஆண்டுகள் பதினாறானாலும் அக இருளோ நீங்கவில்லை*
*கல்விச் செல்வம் மிக்கவராய் காசினியில் வாழவைக்க*
*கலங்காதுழைத்துவிட்டு கணப்பொழுதில் மறைந்தீரே*
*நெறிதவறா வாழ்க்கையினை நிதமும் கடைப்பிடித்தீர்*
*நினைவெல்லாம் இறைபாதம் நிலைத்து நிற்க தொழுவீரே*
*கடமை பல செய்து காலமெல்லாம் காப்பாற்றி வைத்த*
*கண்மணியே உங்களுக்கு கைம்மாறு யாது செய்வோம்*
*பொய்மை மிகு இவ்வுலகை பொருட்டாய் மதியாமல்*
*பொன்னுலகை நாடிப் போனதென்ன புண்ணியனே''*

மந்துவில் வடக்கு,
கொடிகாமம். (54889)

*என்றும் உங்கள் நினைவில் வாழும்:*
குடும்பத்தினர்.


## அன்பொளி கல்வியகம்

யாழ். இந்துக் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

*ஆசிரியர் திரு.வே.அன்பழகன் அவர்களின் தரம் 5*

**புலமைப் பரிசில் பரீட்சை- 2007**

*வகுப்புகள் ஆரம்பமாகின்றன.*

*காலம் -10.11.2006 வெள்ளிக் கிழமை பி.ப. 3.30 மணிக்கு*

*2007 இல் தரம்4 இல் கற்கும் (தற்போது தரம் 3) மாணவர்களுக்குரிய வகுப்புகளும் ஆரம்பமாகின்றன.*

*அனுமதிக்குரிய பதிவுகளை 6.11.2006 திங்கள் முதல் வியாழன் வரை பி.ப. 3மணி தொடக்கம் 5 மணிக்குள் முற்கூட்டியே மேற்கொள்ளவும்.*

-இயக்குநர்.

## விற்பனைக்கு

*குறைந்த விலையில் 45 நாள் பூர்த்தியான நல்ல இன ஜேமன் சப்போட் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு.*

தொடர்பு:
15, சென்பற்றிக்ஸ் வீதி,
றெக்கிளமேசன், குருநகர், யாழ்ப்பாணம்.

## சேவை

**55,000 அமெரிக்கா விசா லொத்தர் விண்ணப்படிவம் பெற, நவம்பர் 5ஆம் திகதி (ஞாயிறு) உதயனை பார்க்கவும்**

Penguin Book Shop,
B2/F23 Bloemendhal Flats,
Colombo - 13.
Tel:- 071 6806843
011 2438367

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்து 1984 இல் பிறந்த A/L கல்வியில் சித்தியெய்து உயர் கல்வி ஒன்றில் ஈடுபட்டுள்ள 5'2" உயரமுள்ள செவ்வாய் குற்றமற்ற பெண்ணிற்கு படித்த வெளிநாட்டு/ உள்நாட்டு மணமகன் தேவை. *தொடர்புக்கு: விளம்பர இல.2931, மே/பா உதயன், யாழ்ப்பாணம்.*

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

828 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

மிதுனம் **01 15 24 36**

**03-11-2006**

செல்லுபடியாகும் தொடர் இல. 5514603 - 5528541

ஜக்பொட் பரிசு ரூபா.1,672,400/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 306,151 | 10/- | 3,061,510/- |
| 2 இலக்கங்கள் | 28,134 | 20/- | 562,680/- |
| 1 இல. + லக்கினம் | 27,751 | 30/- | 832,530/- |
| 2 இல. + லக்கினம் | 2,535 | 100/- | 253,500/- |
| 3 இலக்கங்கள் | 746 | 500/- | 373,000/- |
| 3 இல. + லக்கினம் | 60 | 5,000/- | 300,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,672,400/- | - |
| மொத்தம் | | | 5,783,220/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 365,386 | | 6,806,720/- |

**இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,356,050/-**

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| நுவரெலியா | 5519848-8-39 |
| கம்பஹா | 5526739-1-20 |
| கேகாலை | 5515283-0-11 |
| கம்பஹா | 5520444-8-68 |
| திருகோணமலை | 5517413-2-35 |

## CSC-ASIAN COMPUTER EDUCATION

**O/L or A/L சான்றிதழுடன் வாருங்கள் !**

**ஸ்கொலர்ஷிப் பெற்றுச் செல்லுங்கள் !**




பரீட்சை எழுதிய ஆண்டு, மொழி மற்றும் வயதெல்லை கட்டுப்பாடுகள் இல்லை

தொழில் பயிற்சி அமைச்சில் 1993ம் ஆண்டு முதல் பதியப்பட்ட கல்வி நிலையம்

ICM ENGLAND

TATA-India NEXT GENERATION

Tally Authorised Academy

MERIT 2006
Bring your Result Sheet

14 Years of Education Excellence

## ASIAN COMPUTER SYSTEMS

| யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் - CSC | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|---|
| 2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021-222 5677 | 101,2ம் மாடி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021-222 8196 | கண்டி வீதி, சாவகச்சேரி. 077-3039587 | கொடிகாமம் ரோட், நெல்லியடி. 077-3122198 |


## சாவகச்சேரி நகரசபை

01.01.2007 முதல் 31.12.2007 வரை இறைச்சிக்கடைகளைக் குத்தகைக்கு விடுவதற்கான

### கேள்வி அறிவித்தல்

1. **கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித் திகதி : 20.11.2006 நண்பகல் 12 மணி**
2. **கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி: 30.11.2006 முற்பகல் 10 மணி**
3. **கேள்வி திறக்கப்படும் திகதி: 30.11.2006 முற்பகல் 11 மணி**

கேள்வி அறிவித்தல் அட்டவணை

| இல. | குத்தகை விவரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வற் வரி தவிர) | கேள்விப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாது) |
|---|---|---|---|---|
| 1 | ஆட்டிறைச்சிக்கடை NMS II | 147,000.00 | 5,000.00 | 200.00 |
| 2 | மாட்டிறைச்சிக்கடை NMS IV | 219,000.00 | 1,000.00 | 200.00 |
| 3 | கோழி இறைச்சிக்கடை 1 | 111,000.00 | 1,000.00 | 200.00 |
| 4 | கோழி இறைச்சிக்கடை 2 | 111,000.00 | 1,000.00 | 200.00 |

**குறிப்பு:**

- இறைச்சிக்கடைகளுக்கான சபையால் விடுக்கப்படும் மாத வாடகைகளைச் செலுத்த வேண்டும்.
- கேள்விப்பத்திரக் கட்டணம், கேள்வித் தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு 15% பெறுமதி சேர் வரி (VAT) மேலதிகமாகச் செலுத்தப்பட வேண்டும்.
- கேள்விப்பத்திரங்கள் கோருபவர்கள் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டையைக் கொண்டுவரவேண்டும்.
- மேலதிக விவரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
- போதிய காரணங்களால் கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.

*நகரசபை அலுவலகம்,*
*சாவகச்சேரி. 03.11.2006.* (சி/51275)

திருமதி கு.ஆறுமுகம்
செயலாளர், நகரசபை, சாவகச்சேரி.


உ
சிவமயம்

## விவாஹ சோபன அழைப்பு

**அன்புடையீர்!**

*ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான விய வருஷம் ஐப்பசித்திங்கள் 22ஆம் நாள் (08.11.2006) புதன்கிழமை மிருகசீருஷ நட்சத்திரமும் திருதியை திதியும் சித்தயோகமும் கூடிய சுபதினத்தில் காலை 9.45 மணிமுதல் 11 மணிவரையுள்ள கன்னிலக்கின சுபமுகூர்த்தத்தில்*

*மாவிட்டபுரம்*
*பிரம்மஸ்ரீ ச.சொக்கநாதக்குருக்களின் பௌத்திரனும் எமது ஏக புத்திரனுமான*
சிரஞ்சீவி **விக்னேஸ்வர சர்மா**
**(சங்கர்)**
(பிரதம குரு, வண்ணை வைத்தீஸ்வரன் கோயில், கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் கோயில்)

*மல்லாகம்*
*பிரம்மஸ்ரீ ச.நடேசக்குருக்களின் பௌத்திரியும் எமது புத்திரியுமான*
சௌபாக்கியவதி **ரதீபா**
அவர்களுக்கும்

*கன்னிகாதாரண பாணிக்கிரகண மாங்கல்ய தாரணம் செய்வதாய் திருவருள் துணை கொண்டு பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு மேற்படி முகூர்த்தம்* **''கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத் திருமண மண்டபத்தில்''** *நடைபெறுவதால் தாங்கள் தங்கள் இஷ்டமித்திரபந்துக்களுடன் வந்திருந்து முகூர்த்தத்தை நடத்தி வைத்து தம்பதிகளை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.*

சமாவர்த்தனம்: 07.11.2006 செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும்.
வரவேற்புபசாரம்: 11.11.2006 சனிக்கிழமை மாலை 3 மணிக்கு மணமகள் இல்லத்தில் நடைபெறும்.

**தங்கள் நல்வரவை நாடும்:**

பிரம்மஸ்ரீ சோ.இரத்தினசபாபதிக் குருக்கள்சம் பூர்ணவல்லி தம்பதிகள்
கொக்குவில் சொர்ணசித்தி விநாயகர் தேவஸ்தானம்
ஞானபண்டித வித்தியாலய வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
தொ.பே.இல.: 021 222 7325

*இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

திருமதி சுந்தரேஸ்வரக் குருக்கள்
லலிதாம்பிகை,
மாணற்காடு, காரைநகர்.

(54942)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# திருடனாகப் பார்த்துத் திருந்தாவிட்டால்....?!

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் பேசும் மக்களின் மனித உரிமைகள் கடந்த இரண்டு வருடங்களாகத் தட்டிக் கேட்பார் எவருமின்றி மிகப்பெரிய அளவில் பல வடிவங்களில் மீறப்பட்டு வருகின்றன.

இவற்றை நிறுத்துமாறு, தடுக்குமாறு, கட்டுப்படுத்துமாறு அரசாங்கத் தலைவரான ஜனாதிபதியிடம் சிவில் அமைப்புகளும் அரசியல் தலைவர்களும் பல தடவைகளில் எடுத்துக் கூறியும் எந்தப் பலனும் கிடைக்கவில்லை. நாளாந்தம் மனித உரிமை மீறல் சம்பவங்கள் எழுத்தில் அடங்காமல் உயர்ந்து உயர்ந்து செல்கிறனவே அன்றிக் குறைவதாகத் தகவல் இல்லை.

இத்தகைய சூழ்நிலையில், வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட 22 நாடாளுமன்ற உறுப்பினர்களும், இனி யாரிடம் செல்வது என்று தெரியாமல், ஐக்கிய நாடுகள் சபைக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அரசாங்கத்தின் ஓர் அங்கமான படையினராலும், அந்தப் படையினருடன் சேர்ந்து இயங்கும் ஒட்டுப்படைகளாலுமே வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் மனித உரிமைகள் கணக்கில் அடங்காமல், வகைதொகையின்றி மீறப்படும் சம்பவங்கள் நடைபெற்றதாக, நடைபெறுவதாக அந்த மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

மனித உரிமைகளைக் கண்காணிக்கும் உள்ளூர் நிறுவனங்களின் தகவலின் பிரகாரம், வடக்கு - கிழக்கில் அரசு மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கைகளால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். நாலாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் படுகாயப்படுத்தப்பட்டு ஊனமாக்கப்பட்டுள்ளனர்.

இவை மட்டுமா?

இவை போன்ற பலவகையான நாகரிக உலகுக்கு ஒவ்வாத, அநாகரிகமான மனித உரிமை மீறல்கள் தமிழ்ப் பிரதேசங்களில் மலிந்துள்ளன என்பது ஒன்றும் புதிய செய்தியல்ல.

இராணுவத் தாக்குதல் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள், தாக்குதல் முடிவுற்ற பின்னரும் தமது சொந்த, பூர்வீக வாழ்விடங்களுக்குத் திரும்பச் செல்வதற்கு அனுமதிக்கப்படாத அநீதியும், மனித உரிமை மீறலும் அரங்கேற்றப்படுகின்றன.

வடக்கு - கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகளைச் செய்ய முன்வந்த - முன்வரும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனத் தொண்டர்கள் தடுக்கப்படும் அநியாயமும் ஒரு புறத்தில்.

அதனால், வடக்கு - கிழக்கில் செயற்படும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் பல வெளியேறுவதற்கு முனைந்துள்ளன. சில ஏற்கனவே வெளியேறிவிட்டன.

மொத்தத்தில் -

தமிழ் மக்கள் தமது சொந்த இடங்கள் உட்பட இலங்கையில் எங்கு வாழ்ந்தாலும் அச்ச உணர்வுடன் வாழும் புறச்சூழ்நிலை ஒன்று தோற்றுவிக்கப்பட்டு வருகிறது.

தமிழர்களை அச்சுறுத்தி அவர்களை அடிமைப்படுத்தி, அடக்குமுறைக்கு ஆளாக்கும் நோக்குடனேயே அரசாங்கம் செயற்படுகிறது என்ற தமிழ் எம்.பிக்களின் குற்றச்சாட்டை, அரசை வழிநடத்தும் ஜனாதிபதியாலோ அல்லது ஏனைய மந்திரிப் பிரதானிகளாலோ, அரச அதிகாரிகளாலோ மறுக்க முடியுமா?

நீதிக்குப் புறம்பான கொலைகள் மற்றும் அட்டூழியங்களைப் புரிவோர் குறித்து அரசாங்கம் எவரையாவது சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டித்தது உண்டா?

வடக்கு - கிழக்கில் நாளாந்தம் மனித உரிமை மீறல்களும் மனிதாபிமான நெருக்கடிகளும் மலிந்து வருகின்றன. இவற்றைத் தடுக்க நியாயபூர்வமான பயன்தந்த நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டதாகச் 'சரித்திரமே' இல்லை!

மனித உரிமை மீறல்களும், மனிதாபிமான நெருக்கடிகளும் இலங்கையில் மலிந்துவிட்டன என்று இங்குவாழும் சகலருக்கும் தெரியும். ஆனால், அவற்றை நிறுத்துமாறு எழுப்பப்படும் குரல், செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருக்கிறது. அரசாங்கத்தின் இந்தப் போக்கைத் தட்டிக்கேட்டு அது திருந்திக் கொள்ளும் என எதிர்பார்க்கவும் முடியாதுள்ளது!

ஆயினும், இதனைச் சர்வதேச சமூகம் அவதானிக்கவில்லை என்று கூற இயலாது. இலங்கையில் மனித உரிமை மீறல்கள் கட்டுமீறிப் போவதாக ஐ.நா. சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுவிட்டது.

நீதிக்குப் புறம்பான மரணதண்டனைகள், எதேச்சாதிகாரப் படுகொலைகள் விவகாரங்களுக்கான ஐ.நாவின் விசேட தூதுவர் பேராசிரியர் பியல் அல்ஸ்ரன், ஐக்கிய நாடுகள் சபையின் மூன்றாவது கமிட்டிக் கூட்டத்தில் இது குறித்து கடந்தமாதம் அறிக்கை சமர்ப்பித்துப் பேசியிருக்கிறார்.

இலங்கையில் அண்மைக்காலமாக அரங்கேற்றப்பட்டு வரும் திடீர்த் தாக்குதல்கள், நீதிக்குப் புறம்பான மரணதண்டனைகள் ஆகியவற்றின் அதிகரிப்பானது அந்த நாடு அடக்கமுடியாத - கட்டுப்படுத்த இயலாத நெருக்கடிகளுக்கு மத்தியில் தத்தளித்துக் கொண்டிருப்பதை எடுத்துக்காட்டுகிறது. இந்தப் பாதகமான நிலைமை சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்த்துப் பல காலமாகிவிட்டது - என்று அவர் எடுத்துக்கூறியிருக்கிறார்.

அது மட்டுமின்றி -

இந்த நாட்டில் மனித உரிமைகள் பேணிப் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு முழு அளவிலான சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்புத் தூதுவராலயம் இல்லை என்பதனையும் பேராசிரியர் பிலிப் அல்ஸ்ரன் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

அத்தகைய தூதராலயம் ஒன்றை இலங்கையில் உடனடியாக அமைக்கவேண்டிய தன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஆனால், தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் -

பேராசிரியர் அல்ஸ்ரன் சிபார்சு செய்யும் மனித உரிமைகள் கண்காணிப்புத் தூதராலயம் இங்கு நிறுவப்பட்டாலும், அவர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களும் மனிதாபிமான நெருக்கடிகளை உருவாக்குதலும் தணியும் என்ற நம்பிக்கை இல்லை.

கடந்த பல ஆண்டுகளாகத் தமிழ் மக்களுக்கு எதிரான, குரோத நோக்கத்துடனான அவலங்கள், அட்டூழியங்களை நீக்க அரசாங்கம் முழு மனதுடன் செயற்பட்டதில்லை.

வெளிவர்ணப் பூச்சுக்காக, விசாரணைக்குழுக்கள், ஆணைக்குழுக்கள் என்று உருவாக்கப்பட்ட அமைப்புகளோ அல்லது நீதி நிறுவனங்களோ தமிழ் மக்களின் ஒட்டுமொத்த அவலத்துக்கு உரிய தீர்வை அல்லது நிவாரணத்தை முழு அளவில் தந்ததாக இல்லை. பதவியில் இருந்த அத்தனை அரசாங்கங்களும் ஆசாடபூதித் தனமாகவே செயற்பட்டன.

அவ்வாறு இன்றித் தமிழ் மக்களுக்கு எதிரான அட்டூழியங்களையும் அடக்குமுறைகளையும் நிறுத்தவேண்டும் என்ற உள்ளார்ந்த எண்ணம் தெற்குத் தலைவர்களின் மனங்களில் உதித்தால் மட்டுமே, ஐ.நா. போன்ற சர்வதேச அமைப்புகளால் தமிழர்களுக்கு உதவ இயலும்!

திருடனாகப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒருபோதும் ஒழிக்க முடியாது. சட்டம் வகுத்தென்ன, நீதிமன்று நிறுவி என்ன?

# ஏ-9 வீதியை உடனடியாகத் திறப்பதே பேச்சை மீண்டும் ஆரம்பிக்க ஒரே வழி

## புதிய ஜனநாயகக் கட்சி சுட்டிக்காட்டு

கொழும்பு,நவ.6

ஏ-9 வீதியை உடனடியாகத் திறப்பதே பேச்சுகளை மீள ஆரம்பிப்பதற்கான ஒரே வழி.

- இவ்வாறு தெரிவித்துள்ளது புதிய ஜனநாயகக் கட்சி.

மேற்படி கட்சியின் சார்பாக, அதன் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்:-

அரசு ஏ-9 பாதையைத் திறக்க மறுத்துவரும் நிலைப்பாட்டால் ஜெனிவா பேச்சுகள் தோல்வியடைந்ததுடன், வட பகுதியை பட்டினி நிலைக்கும் தள்ளி மனிதப் பேரவலத்தையும் தோற்றுவித்துள்ளது.

அதேவேளை, அரசு வடக்கு - கிழக்கின் மீது குண்டுகளை வீசியும் எறிகணை வீச்சுக்களை நடத்தியும் வருகின்றது. இத்தகைய இராணுவ நடவடிக்கைகள் ஒரு முழுமையான யுத்தத்தை நோக்கி நகர்ந்து செல்வதையே எடுத்துக் காட்டுகின்றது.

அரசியல் தீர்வு, சமாதானம் எனக் கூறிக்கொண்டு இராணுவத் தீர்வுக்கான பாதையில் பயணிப்பதற்கு அரசு முற்படுமானால் வடக்கு - கிழக்கையும் அதேவேளை முழு நாட்டையும் பேரழிவுக்குள் இழுத்துச் செல்வதாகவே அமைந்துவிடும்.

எனவே' அரசு ஏ- 9 பாதையைத் திறப்பது[illegible]சுக்களை மீள ஆரம்பிப்பதற்கு ஏற்ற வழிவகைகளைக் காண முன்வருவதும் மட்டுமே இன்றைய நெருக்கடிமிக்க சூழலை மாற்றியமைக்க உள்ள ஒரே வழியாகும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதவிக்கு வந்து ஒருவருடம் பூர்த்தியாகப் போகின்றது. மஹிந்த சிந்தனையில் கூறப்பட்ட கௌரவமான அரசியல் தீர்வு என்பதற்குரிய உருப்படியான எதுவுமே முன்னெடுக்கப்படவில்லை.

இரண்டு தடவைகளில் ஜெனிவாவில் இடம்பெற்ற பேச்சுகள் ஆக்கபூர்வமான வழிகளில் முன்னெடுக்கப்படாமையால் தோல்வியில் முடிந்தன. அதேவேளை- பரஸ்பரக் குற்றச்சாட்டுக்களும் மோதல்களும் விரிவடைந்து சென்றன. அவற்றால் உயிரிழப்புக்களையும் இடப்பெயர்வுகளையும் மக்கள் எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

அத்துடன், படுகொலைகளும் ஆள் கடத்தல்களும் பழிக்குப் பழி ஏட்டிக்குப் போட்டி என்ற வகையில் நாளாந்தம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஜனநாயகம் மனித உரிமை சட்டம் ஒழுங்கு என்பன யாவும் அவற்றுக்குரிய அர்த்தங்களை இழந்து நிற்கும் அவல நிலையே காணப்படுகிறது.

எனவே, ஜனாதிபதியும் அரசும் பேரினவாத இராணுவ முனைப்புக் கொண்ட நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுக்கப் போகிறார்களா அல்லது பேச்சு மூலமான அரசியல் தீர்வுக்கு முன்முயற்சிகளைச் செய்யப் போகிறார்களா? என்பதையே மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

அதேவேளை- இலங்கையின் இன்றைய உச்ச கட்ட நெருக்கடியை வடக்கு -கிழக்கின் அவல நிலையையும் பயன்படுத்தி சர்வதேச சமூகம் என்போர் தமது நலன்களுக்கான தலையீடுகளையும் ஊடுருவல்களையும் மிக இலகுவாகச் செய்துகொள்ளும் அபாயத்தையும் எமது கட்சி எச்சரிக்கையுடன் சுட்டிக்காட்டுகின்றது - என்று அதில் உள்ளது.

# 'ஓசானிக் கிறீன் வண்' கப்பலில் இன்று 300 பேர் திருமலைக்கு

யாழ்ப்பாணம்,நவ.6

திருகோணமலையில் இருந்து 300 பயணிகளுடன் 'ஓசானிக் கிறீன் வண்' என்ற பயணிகள் கப்பல் ஒன்று நேற்று காங்கேசன்துறைறை வந்தடைந்தது.

கடற்படையின் கப்பல் ஒன்றின் பாதுகாப்புடன் திருமலையிலிருந்து புறப்பட்ட இக்கப்பல் இன்று காலை காங்கேசன்துறையிலிருந்து 300 பயணிகளுடன் திருகோணமலைக்குப் புறப்படவிருக்கின்றது.

வவுனியாவில் தங்கியுள்ள பயணிகளை யாழ்ப்பாணம் அனுப்பிவைக்கும் பணிகள் ஓரிரு தினங்கள் இடம்பெறும் என்றும் -

அதன் பின் திருகோணமலை பிரதேச செயலகத்தில் பதிவுசெய்துள்ள பயணிகள். இக்கப்பலில் காங்கேசன்துறைக்கு அழைத்துவரப்படுவர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பயணத்தில் பயணி ஒருவரிடமிருந்து ஆயிரத்து 500 ரூபா அறவிடப்படும் என்றும் கூறப்பட்டது.

தனியார் நிறுவனம் ஒன்று இக்கப்பல் சேவையை நடத்துவது குறிப்பிடத்தக்கது. (1-151)

# படுகொலைகள்

உடுப்பிட்டி,நவ6

வடமராட்சி நெல்லியடி ராஜ கிராம வீதியில் நேற்றுமுற்பகல் 11.30 மணியளவில் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கொழும்பு மட்டக்குளியைச் சொந்த இடமாகவும் திருமணத்தின் பின்னர் நெல்லியடி இராஜகிராமத்தை வதிவிடமாகக் கொண்டவருமான இரண்டு பிள்ளைகளின் தந்தையான பொன்னுச்சாமி ரமேஸ்(வயது 31) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இவர் வீட்டிலிருந்து இராஜகிராம வீதியூடாகச் சென்று கொண்டிருந்த போது இனந்தெரியதவர்கள் இவரைச் சுட்டுக்கொன்றுவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

* * *

யாழ்ப்பாணம்,நவ.6

புத்தூர் வடக்குப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் இனந்தெரியாவர்களால் குடும்பப் பெண் ஒருவர் சுட்டுக்கொல்ப்பட்டுள்ளார்.

இதே இடத்தைச் சேர்ந்தவரான ஒரு பிள்ளையின் தாயான நாகமணி றாகினி தேவி (வயது 31) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

வீட்டு வாசலில் இருந்த இவரை அங்கு வந்த இனந்தெரியாதநபர்கள் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டதாத் தெரிவிக்கப்பட்டது.

இவரது சடலத்தை அச்சுவேலிப் பொலீஸார் நேற்றுமுற்பகல் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். (203-78-15)

# சரவணையில் சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடுவோரை நீதியின் முன் நிறுத்தக் கோரிக்கை

## பல்வேறு தரப்புகளுக்கும் மகஜர்கள்

வேலணை சரவணை கிராமத்தில் மனிதாபிமானமற்ற செயல்களில் ஈடுபடுவோரை கண்டுபிடித்து நீதியின் முன் நிறுத்துமாறு கிராம மக்கள் 184 பேர் பல்வேறு தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சரவணை கிராம அபிவிருத்திச் சங்கம் மூலம் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பிரதேச செயலர் மாவட்ட நீதியாளர், பொலீஸ் பொறுப்பதிகாரி, தீவகக் கடற்படைக் கட்டளைத் தளபதி, ஈழமக்கள் ஜனநாயக் கட்சியின் தீவகப் பொறுப்பாளர் ஆகியோருக்கு மகஜர்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அந்த மகஜரில் -

குடாநாட்டில் இன்று நிலவும் அசாதாரண சூழ்நிலையைப் பயன்படுத்தி சிலர் கும்பலாகச் சேர்ந்து சரவணைப் பகுதியில் சமூக விரோதச் செயல்களிலும் குற்றச் செயல்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன்காரணமாக எமது கிராமத்தின் நற்பெயரும் கெட்டுப்போகும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை - எமது கிராம மக்கள் பயத்துடன் வாழவேண்டிய அவல நிலையும் ஏற்பட்டுள்ளது?

எனவே, இத்தகைய செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்களை விரைவில் இனங்கண்டு மக்களின் நிம்மதியான வாழ்வுக்கு வழிவகுக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம் - என்று அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (203)

**நாளை**
ஐப்பசி 21
செவ்வாய்க்கிழமை
07.11.2006
திதி : துதியை
பிற்பகல் : 03.44
நட்சத்திரம் : கார்த்திகை
காலை : 07.35
[illegible]
[illegible]

# கடத்தல்,காணாமற்போதலை அடுத்து குடாநாட்டு மக்கள் மத்தியில் மரணபீதி

## மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி சுட்டிக்காட்டு



கிளிநொச்சி,நவ.6

குடாநாட்டில் கடத்தல் காணாமற்போதல் அதிகரித்திருப்பதை அடுத்து பொதுமக்கள் மரணபீதியுடன் வாழும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி.

ஐரோப்பாவிலிருந்து ஒளிபரப்பாகும் தமிழ்த் தொலைக்காட்சி இணையத்தில் (ரிரிஎன்) இடம்பெற்ற 'வாராந்த அரசியல் கண்ணோட்டம்' நிகழ்ச்சியில் இளம்பரிதி மேலும் தெரிவித்ததாவது-

யாழ். குடாநாட்டில் தற்போது 6 லட்சத்து 25 ஆயிரம் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இதில் 144.15 சதுர கிலோ மீற்றரில் எங்கள் மக்கள் முற்றாக வெளியேற்றப்பட்டு முழுமையாக சிறிலங்கா இராணுவத்தினர் அங்கு நிலை கொண்டுள்ளனர். உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் இது நடந்துள்ளது.

மக்கள் வாழ்கின்ற பிரதேசத்தில் 34வீத நிலப்பரப்பை சிறிலங்கா இராணுவம் ஆக்கிரமித்துள்ளது. குடாநாட்டில் 15 தமிழ் மக்களுக்கு ஓர் இராணுவம் என்ற வகையில் இராணுவம் நிலை கொண்டுள்ளது.

குடாநாட்டு மக்களை பிற பிரதேசங்களுடன் இணைத்து வாழ்நிலை தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய ஏ-9 பாதை மூடப்பட்டு மக்கள் ஓர் இராணுவ முற்றுகைக்குள் திறந்தவெளி சிறைச்சாலைக்குள் அடைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்மக்களுக்கான உணவுப் பொருள்களை ஏ-9 பாதை திறப்பு காலத்தில் நாள் ஒன்றுக்கு 200 லொறிகள் எடுத்துச் சென்றன. இன்று பாதை மூடப்பட்ட நிலையில் கடல் வழியாக கப்பல் மூலம் உணவுப் பொருள்கள் எடுத்துச் செல்லப்படுவதாக அரசாங்கம் பிரசாரம் செய்கிறது. ஆனால் அங்கு மக்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருள்களோ 10 வீதம்தான் வழங்கப்படுகிறது.

40 ஆயிரம் வரையான விவசாயக் குடும்பங்கள் விவசாய தொழிலை மேற்கொள்ள இயலவில்லை. அதே நேரத்தில் அவர்கள் உற்பத்தி செய்த பொருள்களை சந்தைப்படுத்தவும் முடியாத நிலை உள்ளது. ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதால் உரும்பிராயில் உற்பத்தி செய்த பொருள்களை தென்மராட்சிக்குத் கொண்டுசெல்ல முடியவில்லை. தென்மராட்சியில் உற்பத்தி செய்த பொருள்களை யாழ்ப்பாணத்துக்கும் தீவகத்துக்கும் கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.தீவக மக்களின் நிலத்தொடர்புகள் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது.

மீனவர்கள் மீன்பிடிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆழ்கடலில் மீன்பிடிக்கத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதனால் பல்லாயிரக்கணக்கான மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கல்வி மற்றும் சுகாதாரப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பிரதான மருத்துவமனைகள், ஆதார மருத்துவமனைகள் மற்றும் மத்திய மருந்தகங்களில் மக்களுக்கான மருந்துகளைப் பெறமுடியாத நிலை உள்ளது. ஒட்டுமொத்தமாக மக்கள் [illegible]ங்கி நிற்கும் சூழ்நிலை உள்ளது. - என்றார் இளம்பரிதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகள் இம்மாத இறுதியில் பிரஸல்ஸில் கூடுவர்

கொழும்பு, நவ.6

இலங்கையின் உதவிவழங்கும் இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகள் மாநாடொன்று இந்த மாத இறுதியில் பெல்ஜியம் நாட்டின் தலைநகரமான பிரஸல்ஸில் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி தொடர்பாகக் கடந்த 2003 ஆம் ஆண்டில் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடந்த கூட்டதில் கலந்துகொண்ட இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகளே இந்த மாநாட்டில் பங்குபற்றுவார்கள் என அறியவந்துள்ளது.

இலங்கையில் தற்போது இடம்பெற்றுக்கொண்டிருக்கும் வன்முறைகள் தொடர்பாகவும், எதிர்கால சமாதானச் செயற்பாடுகள் தொடர்பாகவும் இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்துரையாடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி வைத்தியசாலைக் கட்டத்தின் மீது நடத்தப்பட்ட விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலுக்கு இலங்கையில் நிலைகொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், நோர்வே மற்றும் அமெரிக்கா போன்ற இணைத் தலைமை நாடுகளின் தூதுவர்கள் தமது ஆழ்ந்த கவலையையும், கண்டனத்தையும் வெளிப்படுத்தியுள்ளமை தெரிந்ததே.

(க)

# மின்வழங்கும் நேரம் மாற்றப்பட்டதால் பொதுமக்கள் அவதி

யாழ்ப்பாணம், நவ.6

நேற்றுமுற்பகல் 9 மணிக்கு வழங்கப்பட வேண்டிய மின்சாரம் பிற்பகல் 2 மணிக்கே கிடைத்தது. இதனால், வழமையாக மின் வழங்கும் நேரத்தைப் பயன்படுத்தி தமது நாளாந்த அலுவல்களை நிறைவேற்றத் திட்டமிட்டிருந்தோர் பெரும் சிரமத்தை எதிர்கொள்ள நேர்ந்தது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தற்போது பெற்றோல் விநியோகிக்கப்பட்டு வருவது தெரிந்ததே. மின்சாரம் வழங்கப்படும் நேரத்திலேயே எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இருந்து எரிபொருள்களை பெற்றுக்கொள்ள முடியும்.

நேற்றுக் காலைமுதல் பெற்றோல் பெறுவதற்காக எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னாள் திரண்ட பொதுமக்கள் மின்சாரம் வழங்கப்படாததை அடுத்து பல மணிநேரம் தவம் கிடக்க நேரிட்டது

தென்மராட்சிப் பகுதியில் நேற்று பலத்த மழையின் மத்தியிலும் எரிபொருளுக்காகக் காத்திருந்தோர் உரிய நேரத்தில் மின்சாரம் கிடைக்கப் பெறாததை அடுத்து ஏமாற்றத்துடன் வீடு திரும்பியதாகவும் கூறப்பட்டது.

ஆஸ்திரேலிய - மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையில் நேற்று நடைபெற்ற மினி உலகக்கிண்ண இறுதிப் போட்டியை பொதுமக்கள் கண்டுகளிக்கும் வகையிலேயே மின்வழங்கும் நேரத்தில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டதாக ஊர்ஜிதப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவித்தன.

# ஏ 9 பாதையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரப்பினர் தெரிவித்தனர். இருப்பினும் கண்காணிப்புக் குழுவினருக்கான பாதுகாப்பு உத்தரவாதங்களை வழங்குவதற்கு முன்வந்தோம். ஆகையால் ஏ-9 பாதை திறக்கப்பட வேண்டும்.

ஏ-9 பாதையையே திறக்க மறுக்கும் சிறிலங்கா தரப்பினால் எப்படி இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை உருவாக்க முடியும்? என்பதுதான் எமது சந்தேகம்.

முதல்நாள் பேச்சுக்களின் போதே நாம் அரசியல் தீர்வுக்கும் தயாராக இருப்பதாக தெரிவித்தோம். ஐக்கிய தேசியக் கட்சியுடன் சிறிலங்கா அரசாங்கம் செய்துகொண்ட ஒப்பந்தம் குறித்து சிறிலங்கா தரப்பு தெரிவித்தது. அதனை நாம் வரவேற்றோம்.

எமது நல்லெண்ண வெளிப்பாடுகளை நாம் வெளிப்படுத்திய போதும் மனிதாபிமான பிரச்சினைகளை முன்வைத்தோம். யாழ்ப்பாணத்தில் 6 இலட்சம் மக்கள் திறந்தவெளி சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டினோம். அவர்களுக்கு அரிசி மற்றும் மா மட்டுமே வழங்கப்பட்டு வருவதையும் கூறினோம். ஆனால் அரசாங்கத் தரப்பினரோ கப்பல்கள் மூலம் உணவுப் பொருள்கள் அனுப்பிவைக்கப்படுவதாகத் தெரிவித்தனர்.

இதர தமிழ் மாவட்டங்களில் வாழும் உறவுகளுடன் யாழ். மக்கள் தொடர்பு கொள்வது முக்கியமானது. அது பாரிய சமூகப் பிரச்சினை. தந்தை ஓரிடத்திலும் மகன் ஓரிடத்திலுமாக உள்ள நிலையில் உறவுகளின் தொடர்பு அவசியமானது என்றும் விளக்கினோம். ஆனால் ஏ-9 பாதை மூடப்பட்டமை குறித்து எதுவித காரணத்தையும் அரசாங்கம் தெரிவிக்கவில்லை.

### காவலரண் பகுதிகளில் வன்முறை நிகழாமல் இருக்க உறுதி வழங்கினோம்

பொதுமக்கள் ஏ-9 பாதையை கடந்து செல்வதில் பாதுகாப்புத்தான் பிரச்சினை எனில், முன்னரங்க காவலரண் பகுதிகளில் எதுவித வன்முறையும் நிகழாத வகையிலான 100 விழுக்காடு பாதுகாப்பை கண்காணிப்புக்குழு மற்றும் அனுசரணையாளர்களுடன் இணைந்து நாம் வழங்குவதாக தெரிவித்தோம். ஆனால் அரசாங்கத் தரப்பில் குறிப்பாக நிமல் சிறிபால டி சில்வா எம்மீது குற்றம்சாட்டிக் கொண்டிருந்தார்.

அடுத்த கட்டப் பேச்சுக்களுக்கான நாள்கள் தொடர்பாக நாம் பேசவில்லை. அதனை நாம் அனுசரணையாளர்களுடன் விவாதிப்போம். ஏ-9 பாதை திறக்கப்படும் பட்சத்திலேயே அடுத்த கட்டப் பேச்சுக்களுக்கு நாம் தயாராவோம். எமக்கு பாரிய மனிதாபிமான பிரச்சினைகள் உள்ளன. இப்போது அடுத்த கட்டப் பேச்சுக்களை தீர்மானிப்பது அனுசரணையாளர்கள்தான்.

சிறிலங்கா அரசாங்கத்திடம் இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் ஏதுமிருப்பின் அதனை பேச்சு மேசையில் முன்வைக்கட்டும். இது தொடர்பில் நாம் கேள்வி எழுப்பும்போது அனைத்துக் கட்சி மாநாடு நடைபெறுவதை சுட்டிக்காட்டுகின்றனர். இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் குறித்து வல்லுநர்கள் குழு ஆராய்வதாகக் கூறினர். அந்த விவாதங்களும் மாநாடும் முடிவடைந்த பின்னர் அது பற்றிப் பேசுவோம் என்று நாம் தெரிவித்துள்ளோம். தென்னிலங்கை கட்சிகள் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவதால் நிலைமைகள் மாறிவிடாது. என்னுடன் கை குலுக்குவதும் உதவாது. தமிழரின் வரலாற்றில் இப்படியாக பல கை குலுக்கல்களை சிறிலங்கா தரப்பினருடம் நாம் மேற்கொண்டு விட்டோம். நடைமுறை ரீதியாக அவர்கள் செயற்பட வேண்டும்.

இலங்கைத் தீவில் இப்போது யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஏனெனில் எறிகணைத் தாக்குதல்களும் வான்குண்டுத் தாக்குதல்களும் நாளாந்தம் நடத்தப்படுகின்றன. ஏ-9 பாதையை சிறிலங்கா தரப்பு திறக்க மறுப்பதே நிச்சயமாக பாரிய யுத்த நடவடிக்கைக்காகத்தான். எமது முன்னரங்க நிலைகள் தாக்கப்பட்டால் நாம் பதில் தாக்குதல் நடத்துவோம். யார் வலிந்த தாக்குதலை நடத்தினார்கள் என்பதை அறிய கண்காணிப்புக் குழுவினரை சிறிலங்கா தரப்பு அனுமதிப்பதில்லை.

### தலைவரின் மாவீரர் நாள் உரையை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறோம்

வடக்கு-கிழக்கு இணைப்புக்கு எதிரான சிறிலங்கா அதிஉயர் நீதிமன்றத் தீர்பானது மகிந்த சிந்தனையின் வெளிப்பாடுதான்.

சிறிலங்காவின் ஒவ்வொரு தலைவருக்குமே நாம் சந்தர்ப்பங்களை வழங்கியிருக்கிறோம். யாழில் பாரிய மனித அவலம் ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையில் எமது தேசியத் தலைவரின் வருடாந்த கொள்கைப் பிரகடன உரையில் அது பாரதூரமான விடயமாக இருக்கும். மகிந்த ஒரு யதார்த்தவாதியா அல்லது எதிரானவரா அல்லது கடந்த கால சிறிலங்கா தலைவர்களைப் போன்றவரா என்று எமது தேசியத் தலைவர் நவம்பர் 27ஆம் நாள் தெரிவிக்க உள்ளார் என்பதை நாம் ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம் என்றார் சு.ப.தமிழ்ச்செல்வன்.

# 15 சம்பவங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போனமை, ஹபரணை - திஹம்பத்தனவில் கடற்படையினரின் இடைத்தங்கல் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் உட்பட 15 சம்பவங்களை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்கவே இவ் விசாரணைக் குழு நியமிக்கப்படவுள்ளது.

விரைவில் ஓய்வு பெறவிருக்கின்ற உயர் நீதிமன்ற நீதிபதி என்.கே. உடலகம இவ் விசாரணைக் குழுவிற்கு தலைவராக நியமிக்கப்படவுள்ளார்.

இதன் ஏனைய உறுப்பினர்களாக சிவில் சமூகப்பிரதிநிதிகளான தேவநேசன் நேசையா, மனோகெள்ரி முத்தெட்டுவெகம, ஜெஸீமா இஸ்மாயில் மற்றும் ஜாவித் யூசுப் ஆகியோர் உள்ளிட்ட ஏழு பேர் நியமிக்கப்படுவர். இக்குழு ஒரு வருடத்திற்குள் இச்சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடத்தி விரிவான அறிக்கை ஒன்றை ஜனாதிபதிக்குச் சமர்ப்பிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த)

# தேடிய உடைமைகளைக் கைவிட்டு வெளியேறுகின்றனர் வாகரை மக்கள்

மட்டக்களப்பு, நவ.6

மட்டக்களப்பு மாவட்டம் வாகரைப் பகுதியில் இடம்பெற்றுவரும் மோதல்களினால் அங்குள்ள மக்கள் தமது சொந்தபந்தங்கள், சொத்துக்களையும் கைவிட்டு விட்டு இடம்பெயர்ந்து வருகின்றார்கள் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வாகரை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் கடந்த சில நாள்களாக கிபீர் விமானங்கள் தொடர்ச்சியாக குண்டுகளை வீசி தாக்குதல் நடத்திவருகின்றன. இராணுவ முகாம்களில் இருந்து அவ்வப்போது ஏவப்படும் எறிகணைகள் மக்கள் குடியிருப்புப் பகுதிகள் மீது வீழ்ந்து வெடிக்கின்றன. இதனால் அந்தப் பகுதி மக்கள் கையில் அகப்பட்ட பொருள்களைஎடுத்துக்கொண்டு ஓட்டமும் நடையுமாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வந்துகொண்டிருக்கின்றார்கள்.

இந்த தொடர்ச்சியான தாக்குதல்களினால் ஏற்கனவே இடம்பெயர்ந்து வாகரையில் தங்கியிருந்த சுமார் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் செய்வதறியாது அந்தரிக்கின்றனர். எனினும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் இடையிலான போக்குவரத்து தடைப்பட்டிருப்பதால் அந்த மக்கள் அங்கிருந்து வெளியேற முடியாதநிலை ஏற்பட்டிருக்கின்றது.

அப்படியிருந்தும் நூற்றுக் கணக்கான மக்கள் தங்களது உறவினர்கள், உடைமைகளை எல்லாம் கைவிட்டுகாடுகளுக்கு ஊடாக எப்படியோ நடந்து சென்று அரச கட்டுப்பாட்டுப் பகுதியை அடைந்திருக்கின்றார்கள். அவர்களில் சில பெண்கள் தங்கள் பிள்ளைகளில் சிலரையும், கணவனையும் பிரிந்து கைக்குழந்தைகளுடன் தப்பிவந்திருக்கின்றார்கள் என்றும் அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

மக்கள் ஓடி வந்த வழிகளில்கூட இராணுவத்தினர் ஷெல் மற்றும் விமானத் தாக்குதல்களை நடத்தினர் எனவும் - இதனால் பலர் உயிரிழந்திருக்கலாம் எனத் தாங்கள் கருதுகின்றனர் எனவும் அரச கட்டுப்பாட்டுப்பகுதியை வந்தடைந்த மக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

வாகரையில் மேலும் பல ஆயிரக்கணக்கான மக்கள் உண்பதற்கு உணவு கூட இல்லாமல் தொடர்ந்தும் விமானத் தாக்குதல்கள் ஷெல் வீச்சுக்கள் மத்தியில் மிகவும் ஆபத்தான கட்டத்தில் சிக்கித்தவிக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-12)

# ஜால கப்பலில் சீனி

திருகோணமலை, நவ6

யாழ்ப்பாணத்துக்கு 2 ஆயிரம் மெற் றிக் தொன் சீனி நேற்று 'ஜால' என்ற கப்பல் மூலம் எடுத்துச்செல்லப்பட் டது.

கப்பலிலிருந்து சீனி இறக்கும் பணிகள் பருத்தித்துறை துறைமுகத்தில் இடம் பெறவுள்ளன. (1-151)

# சதாமுக்கு மரணதண்டனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சதாமின் மரணதண்டனையை அடுத்து ஈராக்கில் பெரும் பரபரப்பும், பதற்றமும் நிலவுகிறது. எப்போது வேண்டுமானாலும் வன்முறைகள் பெருமளவில் வெடிக்கக் கூடிய அபாயம் அங்கு ஏற்பட்டிருக்கிறது.

பேரழிவு ஆயுதங்களைத் தயாரித்ததாகக் கூறி ஈராக் மீது அமெரிக்கா கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் போர் தொடுத்தது. கடும் தாக்குதலுக்குப் பிறகு சதாம் ஹுசைன் ஆட்சியை அமெரிக்கக் கூட்டுப்படை அகற்றியது. ஆனால், சதாம் ஹுசைன் அமெரிக்கப் படையிடம் சிக்காமல் பதுங்கியிருந்தார்.

பல மாதங்களாக நடந்த தேடுதல் வேட்டைக்குப் பிறகு பாதாள அறையில் பதுங்கியிருந்த சதாம் ஹுசைனை அமெரிக்கப் படையினர் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னர் கைது செய்தனர். சதாம் ஆட்சி அகற்றப்பட்டதைத் தொடர்ந்து அங்கு அமீது கர்சாய் என்பவர் தலைமையில் புதிய ஆட்சி ஏற்பட்டது.

சிறையில் அடைக்கப்பட்ட சதாம் ஹுசைன் மீது பல்வேறு மனித உரிமை மீறல் தொடர்பான வழக்குகள் பதிவுசெய்யப்பட்டன.

தனது ஆட்சிக் காலத்தில் சதாம் ஹுசைன் தனது அரசியல் எதிரிகளைக் கொன்றார் எனவும், 1980ஆம் ஆண்டு துஜைல் நகரில் 148 ஷியா முஸ்லிம் மக்களைக் கொன்று குவித்தார் என்றும் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

பாக்தாத்தில் இந்த வழக்கை விசாரிக்க தனி நீதிமன்றம் அமைக்கப்பட்டது.

இந்த வழக்கு விசாரணையின்போது சதாம் ஹுசைனின் சட்டத்தரணிகள் பலர் கடத்தப்பட்டனர். விசாரணைக் கூண்டில் உட்கார்ந்தபடியே சதாம் ஹுசைன் நீதிபதியுடன் காரசார விவாதத்தில் ஈடுபட்டார். பல தடவை விசாரணைக்கு ஒத்துழைக்காமல் வெளிநடப்புச் செய்தார்.

வழக்கு விசாரணையில் அமெரிக்கத் தலையீடு இருப்பதாகவும், நீதிபதி அமெரிக்காவின் கைப்பொம்மை என்றும் சதாம் ஹுசைன் ஆவேசமாகக் குற்றம் சாட்டினார்.

உலகம் முழுவதும் பரபரப்பை ஏற்படுத்திய இந்த வழக்கில் கடந்த ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்படுவதாக இருந்தது. ஆனால், தீர்ப்பு 2 வாரத்துக்கு மேல் தாமதம் ஆனது. நேற்று இந்த வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டது.

# யுனிசெவ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சி அரச அதிபர் கே. இராசநாயகம் மற்றும் சிறுவர் அமைப்புகளின் பிரதிநிதிகளையும் அவர் சந்திப்பார்.

வன்னிப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் சிறுவர் நலன் குறித்த திட்டங்களையும் அவர் பார்வையிட இருக்கிறார். (த-1)

# பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பான இராணுவ அதிகாரிகளுடன் இவர்கள்விரிவாகக் கலந்துரையாடினர் என்று தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்பைப் பலப்படுத்தும் நோக்கில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து, இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, பிராந்தியத் தளபதிகளுக்கும், கட்டளை அதிகாரிகளுக்கும் விளக்கமொன்றினை அளித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதன் மூலம் தற்போது கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்பு ஒழுங்குகள் வலுப் படுத்தப்பட்டுள்ளன என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.


கணக்கீடு

A\L 2007\2008 & DAY PAPER CLASS

Tue., Wed 3-5 p.m.

ஆரம்பம் 07.11.2006 நாளை 3p.m.

Niru (Kondavil)



தமிழ்

A\L 2007, A\L 2008 DAY CLASS

புதிய பிரிவுகள்

பிரபல தமிழ் ஆசிரியர்

By திருமதி யோ.பங்கயச்செல்வி (B.A.Hons)

8.11.2006 புதன்கிழமை பி.ப. 4மணி

10.11.2006 வெள்ளிக்கிழமை பி.ப. 3மணி

CTC

இயக்குநர் G.Srivarathan



விண்ணப்பிக்கவும்

செய்திப் பத்திரிகையில் உதவி ஆசிரியராகவும், அலுவலகச் செய்தியாளராகவும் பணியாற்றிய ஐந்து வருடங்களுக்குக் குறையாத முன் அனுபவம் உள்ளவர்கள் 12.11.2006ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

முழுமையான சுய விவரங்களுடன், சிபார்சு செய்யக்கூடிய இருவரின் நற்சான்றுப் பத்திரங்கள், கிராம சேவகரின் வதிவிட அத்தாட்சிப் பத்திரம் ஆகியவற்றை இணைத்து அனுப்புதல் அவசியம்.

யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கும், ஆங்கில அறிவுடையோருக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

வயதெல்லை – 25 முதல் 45 வரை.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

விளம்பர இலக்கம்: 121

உதயன் பணிமனை

361, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.11.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org